**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.172/2017 | Date | : 23.01.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.8 | Taluk | : |
| Name | : **தனபால்** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.01.2026

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் 2012 ஆம் வருடம் மாவட்ட துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று, தற்போது கோவை மாநகரம் விமான நிலையம் அருகில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 22.03.2009ம் தேதி ஈரோடு மாவட்ட காவல்துறை டவுன் காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது, நிலைய குற்ற எண் 213/2009 சட்டப்பிரிவுகள் 147, 365, 323, 506(2) இதச மற்றும் மற்றும் 3(1) (X) SC/ST வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு புலன் விசாரணை செய்தேன். புலன் விசாரணையில் சாட்சிகள் நேரு விவேகானந்தன் மற்றும் மற்ற சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு வாதிக்கும், எதிரிகளுக்கும் ஜாதி சான்றிதழ் கோரி மாவட்ட வட்டாட்சியர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்து ஜாதி சான்றிதழ் பெற்றேன்.

2. பிறகு இவ்வழக்கில் அரசு வழக்கறிஞரின் கருத்துரை பெற்று மாவட்ட ஆட்சியரின் கண்காணிப்பு குழுவிற்கு வழக்கு கோப்புகளுடன் அறிக்கையை சமர்ப்பித்தேன். ஈரோடு தெற்கு காவல் நிலைய குற்ற எண் 213/2009 என்ற வழக்கில் வழக்கு சங்கதியை பொருத்தமட்டில் சம்பவ இட விசாரணையிலும், சாட்சிகள் உடைய

வாக்குமூலத்தின் மூலமும் இவ்வழக்கு பிழை உள்ளதாக கருதி மேல் நடவடிக்கை கைவிடப்பட்டு இறுதி அறிக்கையை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் நான் கொடுத்தது தான். **(இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1. குற்ற எண் 213/2009 என்ற வழக்கு சம்பந்தமாக இந்த வழக்கின் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தாரா என்றால் விசாரணை செய்தார். மாவட்ட ஆட்சியரின் கண்காணிப்பு குழுவிற்கு அனுப்பிய அறிக்கையை இந்த வழக்கின் உதவி ஆய்வாளரிடம் நான் ஒப்படைத்தேனா என்றால் இல்லை நான் பணி மாறுதலில் சென்று விட்டதால் நான் ஒப்படைக்கவில்லை. குற்ற எண் 213/2009 வழக்கின் இறுதி அறிக்கையை நான் எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

2. மேற்படி இறுதி அறிக்கையின் RCS எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் சரிவர புலன விசாரணை செய்யாமல் மேற்படி குற்ற எண்ணில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் அனைவரும் அந்த சமயத்தில் இருந்த ஆளுங்கட்சியில் உறுப்பினராக இருந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக மேற்படி வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நான் எந்த ஒரு சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.01.23 17:13:15 -0800

Judicial Magistrate No.III,

Erode.